Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

19.5.2023
ஊடக வெளியீடு
Ir. பத்மநாதன் K.
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

அதிகமான நீர் பிரச்சனைகள் உள்ளடக்கிய சிறிய மாநிலம்: PBAPP, ஆறு (6) பினாங்கு நீர் விநியோக தலைப்புகளில் SPAN-க்கு விளக்கம்

- **SPAN பணிக்குழுவைப் பிரதிநிதித்து அதன் தலைவரான சார்லஸ் சந்தியாகோ, பினாங்கில் உள்ள 3 அணைகள் மற்றும் சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையைப் பார்வையிட்டார்.**

- **முக்கிய தலைப்புகள் கலந்துரையாடல் : WCP 2030, சுங்கை மூடா நதி நீர்மட்ட சம்பவம், UMBA, SPRWTS, MDEP மற்றும் ஆயர் ஈத்தாம் அணை செயல் திட்டம்.**

பினாங்கு, வெள்ளி, 19.5.2023: பினாங்கு நீர் விநியோக வாரியம் சென். பெர்ஹாட் (PBAPP) பினாங்கு தொடர்பான 6 முக்கிய தலைப்புகளில் தேசிய நீர் சேவை ஆணையத்திற்கு (SPAN) விளக்கமளிக்கப்பட்டது.

18.5.2023 மற்றும் 19.5.2023 ஆகிய தேதிகளில் SPAN தலைவர் சார்லஸ் சந்தியாகோ தலைமையில் அதன் பிரதிநிதிகளுடனான 2 நாட்கள் அலுவல் பயணம் காரணமாக பினாங்கு மாநிலத்திற்கு வருகையளித்த போது இந்த விளக்கக்கூட்டம் நடைபெற்றது. சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலை, ஆயர் ஈத்தாம் அணை, மெங்குவாங் அணை மற்றும் தெலுக் பஹாங் அணை ஆகிய இடங்களுக்கு இந்தக் குழுவினர் பயணம் மேற்கொண்டனர்.

SPAN தரப்பினர் PBAPP எழுப்பிய 6 தலைப்புகள்;

1.	நீர் தற்செயல் திட்டம் 2030 (WCP 2030)	• 2030 ஆம் ஆண்டு வரை நீர் விநியோகம் போதுமானதாக இருப்பதை உறுதி செய்வதற்காக மொத்தம் ரிம1.185

		பில்லியன் செலவில் 8 முக்கிய நீர் விநியோகத் திட்டங்களைச் செயல்படுத்த PBAPP திட்டம் வகுத்துள்ளது.
2.	சுங்கை பேராக் மூல நீர் பரிமாற்றத் திட்டம் (SPRWTS)	• பினாங்கு மாநில அரசாங்கம் மற்றும் PBAPP தரப்பினர் 2030ஆம் ஆண்டுக்குள் SPRWTS திட்டத்தின் அவசியம் மற்றும் அதனை மத்திய அரசாங்கம் செயல்படுத்தப்படுவதற்கான முக்கிய காரணங்களை அறிவித்தல்.
3.	சுங்கை மூடா நீர்மட்ட சம்பவம்	• கெடாவில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக பினாங்கில் சுமார் 400,000 பயனீட்டாளருக்கு நீர் விநியோகத்தில் இடையூறு மற்றும் இச்சம்பவம் தொடர்பாக PBAPP இன் அவசரகால நடவடிக்கைகள் குறிப்பிடுதல்.
4.	உலு மூடா வடிநில நீர் அமைப்பு (UMBA)	• பெர்லிஸ், கெடா மற்றும் பினாங்கு ஆகியவற்றின் பொது நலனுக்காக உலு மூடா (சுங்கை மூடா உட்பட) பாதுகாக்க மற்றும் தொழில் ரீதியாக நிர்வகிக்க ஒரு ஏஜென்சி நிறுவுதல்.
5.	மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டம்(MDEP)	• பினாங்கு மாநில அரசாங்கம் மற்றும் PBAPP ஆகியவை MDEPஐ விரைவில் முடிக்க மத்திய அரசாங்கத்தின் அவசர உதவியை நாடுகிறது. ஆகவே, விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையை, வறட்சி அணையாகவும், அவசரகால அணையாகவும், தினசரி அணையாகவும் எதிர்காலத்தில் திறம்பட முழுமையாகவும் செயல்படும்.
6.	ஆயர் ஈத்தாம் அணை செயல் திட்டம்	• வழக்கத்திற்கு மாறாக குறைந்த மழைப்பொழிவு மற்றும் அதிக நீர் பயன்பாடு காரணமாக, 1.1.2023 முதல் ஆயர் ஈத்தாம் அணையின் பயனுள்ள நீர்மட்டத்தை பாதுகாப்பதற்கான திட்டத்தை PBAPP உறுதி செய்கிறது.

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

SPAN-க்கு போதுமான தரவு மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டது. எனவே, PBAPP வாரியத்திற்கு SPAN ஆணையம் பினாங்குக்கு உரிய நேரத்தில் மத்திய அரசாங்க அளவிலான ஆதரவை நல்கி உதவி வழங்கும் என்று நம்பப்படுகிறது.

பினாங்கு அதிக நீர் பிரச்சனைகள் கொண்ட ஒரு சிறிய மாநிலமாகும். 2030 மற்றும் அதற்குப் பிறகு பினாங்கில் போதுமான மூல நீர் மற்றும் நிலையான நீர் விநியோகம் அனைவருக்கும் இருப்பதை உறுதி செய்ய மத்திய அரசாங்கத்தின் உதவி எங்களுக்குத் தேவை.

நன்றி.

எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவு
மின்னஞ்சல் :syarifah@pba.com.my

18.5.2023 : PBAPP & PBAHB CEO Ir. Pathmanathan K. (*left*), briefing SPAN working delegation headed by its Chairman, Tuan Charles Santiago (*second from left*) on 6 key topics concerning water supply in Penang.

18.5.2023 : PBAPP & PBAHB CEO Ir. Pathmanathan K. (left), with SPAN working delegation headed by its Chairman, Tuan Charles Santiago at the Expanded Mengkuang Dam.

18.5.2023 : PBAPP & PBAHB CEO Ir. Pathmanathan K. (*front row, third from left*), with SPAN working delegation headed by its Chairman, Tuan Charles Santiago (*front row, fourth from left*) at the Expanded Mengkuang Dam.